## தமிழ்நாட்டை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும்

# நமது முதலமைச்சருக்கு நீங்கள் என்றைக்குமே உறுதுணையாக இருக்க வேண்டும்!

## தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தின் 8 ஆம் ஆண்டு விழாவில் –

## 5 ஆயிரம் மாணவிகளுடன் கலந்துரையாடி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!





**சென்னை, மார்ச் 16–**

**சென்னை கிழக்கு மாவட்டம் – பிராட்வேயில், தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தின் 8 ஆம் ஆண்டு விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.**

**அந்நிறுவனத்தில் பயிற்சி பெறும் 5 ஆயிரம் மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களிடையே துணை முதல்வர் அவர்கள் உரையாற்றுகையில், "தமிழ்நாட்டைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் நமது முதலமைச்சர் அவர்களுக்கு, மாணவச் செல்வங்களாகிய நீங்கள் என்றைக்குமே உறுதுணையாக இருக்க வேண்டும்!" என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த நிறுவனம் இன்று எட்டாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இது மேலும் வெள்ளி விழா, பொன் விழா, நூற்றாண்டு விழாவைக் காண வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

வட சென்னையில் இருக்கக்கூடிய அனைத்து மாணவர்களுக்கும் இந்தத் தொண்டு நிறுவனம் மிகுந்த ஓர் உதவியாக இருக்க வேண்டும் என்று என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொண்டு நிறுவனம் நடத்திய பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் கலந்துகொண்டிருக்கிறேன்.

அண்ணன் சேகர்பாபு அவர்கள் முன்னெல்லாம் பத்து நாளைக்கு ஒரு முறை அவரின் கிழக்கு மாவட்டத்துக்கு என்னை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்துவார். அது இப்போது கடந்த இரண்டு மாதங்களாக மூன்று நாட்களுக்கு ஒரு முறை, நான்கு நாட்களுக்கு ஒரு முறை என அடிக்கடி அழைத்து வந்துவிடுகிறார். நானும் தொடர்ந்து தவறாமல் வந்துவிடுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால் நேற்றிரவுதான் நான் சென்னைக்கே வந்தேன். நான் சென்னைக்கு எப்போது வருவேன் என்று விசாரித்துக் காத்துக்கொண்டு இருந்து என்னை இன்று வீட்டிலிருந்து அழைத்து வந்திருக்கிறார். ஆயிரக்கணக்கான மாணவிகள், மாணவர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்களின் எழுச்சியைக் காணும் போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

**அண்ணன் சேகர்பாபு ஒரு புயல்**

அண்ணன் சேகர்பாபு அவர்களின் பணிகளைப் பார்த்து நம் முதலமைச்சர் அவர்கள் சேகர்பாபு இல்லை, "செயல் பாபு" என்று அடிக்கடி பாராட்டுவார். அந்த அளவுக்கு ஒரு புயல் மாதிரி அவர் வேலை செய்வார்.

அதுவும் குறிப்பாக, இந்த வடசென்னையின் வளர்ச்சிக்காக எப்போதுமே துடிப்போடு செயலாற்றுபவர்தான் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அவருக்கு மீண்டும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை அழைத்து உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தனை மாணவிகள் வந்திருக்கிறீர்கள், இத்தனை மகளிர் வந்திருக்கிறீர்கள் என்றால், இங்கு ஒவ்வொருவரும் வாழ்க்கையில் நிச்சயம் ஏதாவது சாதிப்போம், சாதிப்பீர்கள் என்கிற லட்சியத்தோடு இன்று நீங்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள். இந்த நிறுவனத்தின் சார்பாக டாலி பயிற்சி, கணினி கல்வி, தையல் பயிற்சி, அழகுக்கலை பயிற்சி இப்படி பல்வேறு பயிற்சிகளை உங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உங்களின் முயற்சியும் நீங்கள் எடுக்கக்கூடிய அந்தப் பயிற்சியும் நிச்சயம் உங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துத்தரும். குறிப்பாக, நீங்கள் கற்றுக்கொள்ளும் அந்தத் திறன்கள் உங்களின் வேலை வாய்ப்பை நிச்சயமாக உறுதி செய்யும் என்று நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதன் மூலம் உங்களின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையும்.

திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரை கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு நம் அரசு. நேற்று காலையில் நீங்கள் அனைவரும் ஒரு காணொலி பார்த்திருப்பீர்கள். நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு சிறுவர்களை அழைத்து உட்கார வைத்துப் பேசிய அந்தக் காணொலி.

அந்தச் சிறுவர்களை நான் நேற்றுதான் முதன்முதலாகப் பார்த்தேன். அந்தச் சிறுவர்கள் ஏற்கனவே இன்ஸ்டாகிராமிலும் சமூக ஊடகங்களிலும் மிகவும் புகழ்பெற்றவர்கள். அவர்கள் அதில் மட்டும் புகழ்பெற்றவர்கள் இல்லை, படிப்பிலும் மிகச் சிறந்தவர்கள். அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட நம் முதலமைச்சர் அவர்கள் இருவரையும் வரச் சொல்லி அவர்களோடு பேசியதை காணொலியில் நீங்கள் அவர்கள் பேசியதைப் பார்த்திருப்பீர்கள்.

அப்போது, நம் முதலமைச்சர் அவர்களிடம் பேசும்போது என்ன சொல்கிறார் என்றால், ``நீங்கள் நன்றாக 'ரீல்ஸ்' போடுகிறீர்கள், அதற்கு என் வாழ்த்துகள். ஆனால், அதே சமயத்தில் உங்களின் படிப்பு மிகவும் முக்கியம், அதைக் கவனமாகத் தவறவிட்டு விடாதீர்கள்" என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். படிப்பில் நீங்கள் சாதித்துப் பெரிய ஆளாக வர வேண்டும், பெரிய அதிகாரிகளாக வர வேண்டும். ஒருவர் ஐ.பி.எஸ் ஆக வேண்டும் என்கிறார், இன்னொரு சிறுவன் ஐ.ஏ.எஸ் படிக்க வேண்டும் என்கிறார். இருவரும் மாவட்ட ஆட்சியர், காவல்துறை அதிகாரி.

முதலமைச்சர் அவர்கள் எப்போதுமே சொல்வதுதான், "ரீல்ஸைப் பார்த்துக்கொண்டு ரியாலிட்டியை விட்டு விடக் கூடாது." ஏனெனில், தமிழ்நாட்டின் எதிர்காலம் இங்கே இருக்கக்கூடிய இளைஞர்களாகிய உங்கள் கைகளில் தான் இருக்கிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பள்ளிக்கல்வியாக இருந்தாலும் சரி, கல்லூரிக் கல்வியாக இருந்தாலும் சரி நம் முதலமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களைப் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்தி வருகிறார்.

பள்ளி மாணவர்கள் தொடங்கி கல்லூரி மாணவர்கள் வரை இன்று பல்வேறு திட்டங்களை நம் அரசு செயல்படுத்தி இருக்கிறது. உதாரணத்துக்கு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

பெற்றோர்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தால் போதும், முதலில் அவர்களுக்குக் காலையில் தரமான உணவு, அதன் பிறகு, தரமான கல்வி இரண்டையும் நம் அரசு கொடுக்கிறது. இன்று ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் பயன்பெற்று வருகிறார்கள்.

பள்ளி மாணவர்கள் அடுத்து கல்லூரிக்குச் சென்று சேர வேண்டும். அதற்கு அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள், மாணவிகள் உயர்கல்வி படிக்க எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும், தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக 1,000 ரூபாயை நம் அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது. 12 லட்சம் மாணவ, மாணவிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

சமீபத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதை ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறோம். நவீன தொழில்நுட்பத்துடன் அந்த மடிக்கணினி வழங்கப்பட்டிருக்கிறது.

**நவீன தொழில்நுட்பத்துடன் மடிக்கணினிகள்**

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குழந்தையும் எப்படியாவது படித்து முன்னேற வேண்டும் என்கிற எண்ணத்தோடு நம் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தாய் தந்தை இல்லாத குழந்தைகள்கூட விடுபட்டுப் போய்விடக் கூடாது என்று "அன்புக்கரங்கள்" திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருந்து நம் அரசு இன்று செயல்பட்டு வருகிறது. இப்படி, மாணவர்களுக்கு இவ்வளவு திட்டங்களைச் செயல்படுத்துவதால் தான் இன்று இந்தியாவிலேயே கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது.

இதைச் சும்மா சொல்லவில்லை, தரவுகளுடன் சொல்கிறேன். ஜி.இ.ஆர் என்று சொல்வார்கள். மொத்தச் சேர்க்கை விகிதம் (Gross Enrollment Ratio). பள்ளி முடித்துவிட்டு எத்தனை பேர் கல்லூரிக்குச் செல்கிறார்கள் என்பது தான் அந்தக் கணக்கு.

இந்தியாவின் ஜி.இ.ஆர் சராசரி 28%. ஆனால், தமிழ்நாட்டின் ஜி.இ.ஆர் 50%. இந்தியாவிலேயே முதலிடம் நம் மாநிலம். ஆனால், அது போதாது, அந்த 50 சதவிகிதத்தை 100 சதவிகிதமாக மாற்ற வேண்டும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

படித்து வரும் எல்லா மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பையும் நம் அரசு உருவாக்கி வருகிறது. ``நான் முதல்வன்" திட்டம் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். தனியார் துறையில் மட்டுமல்லாமல், அரசுத் துறையிலும் வேலைவாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பிரிவு மூலமாகப் பயிற்சியையும் உதவித்தொகையையும் நம் அரசு வழங்கிக்கொண்டு இருக்கிறது.

குறிப்பாக, ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் படிக்கும் மாணவர்களுக்கு நம்அரசு முழு ஒத்துழைப்பு வழங்குகிறது. ஒன்றிய அரசுப் பணிகளுக்கான யு.பி.எஸ்.சி தேர்வில் தமிழ்நாட்டிலிருந்து தேர்வாகிறவர்கள் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துவிட்டது.

'நான் முதல்வன்' திட்டம் மூலம் நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பு கவனம் செலுத்தினார்கள். இன்று நம்தமிழ்நாட்டிலிருந்து 56 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் 'நான் முதல்வன்' திட்டத்தின் பயனாளிகள். இந்தியாவில் தரவரிசையில் இரண்டாம் இடம் நம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மாணவி பெற்றுள்ளார்.

இப்படி மாணவர்களுக்கு, இளைஞர்களுக்குப் பல்வேறு வகையில் நம் அரசு துணையாக இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு முகாம்களை நம் அரசு நடத்திக்கொண்டு இருக்கிறது. நீங்களும் நன்றாகப் படித்துத் திறன்களை வளர்த்துக்கொண்டு மிகப் பெரிய அறிவாற்றலோடு வளர வேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்குமான அந்த வேலைவாய்ப்பை உறுதி செய்ய முடியும்.

நம் முதலமைச்சர் அவர்கள் தொழில் முதலீடுகளை ஈர்த்து நிறைய தொழிற்சாலைகளை இன்று தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். புத்தாக்க நிறுவனங்களைப் பார்த்தீர்கள் என்றால் இந்தியாவிலேயே நம் தமிழ்நாடுதான் முதன்மையான மாநிலம். சுய தொழில் தொடங்க நினைக்கிறவர்களுக்கு நம் திராவிட மாடல் அரசு எல்லா வகையிலும் உதவி செய்கிறது.

இன்று இங்கே டாலி, தையற்கலை, அழகுக்கலை பயிலும் நீங்கள் பயிற்சியை முடிக்கும்போது திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயமாக அமைந்திருக்கும். புதிய ஆட்சி அமைந்ததும் நீங்கள் படித்து முடித்ததற்கான சான்றிதழ்களையும், வேலைவாய்ப்பையும் நம் அரசே உங்களுக்கு வழங்கும்.

அந்த நிகழ்ச்சிக்கும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் என்னை நிச்சயம் அழைப்பார் என்று நான் நம்புகிறேன். எனவே தமிழ்நாட்டைத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் நம் முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் என்றைக்குமே உறுதுணையாக இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைபடாமல் இருக்கும். இந்த அரசு மேன்மேலும் உங்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு நீங்கள் நம் முதலமைச்சருக்கும் நம் அரசுக்கும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வந்திருந்த அனைத்து மாணவ, மாணவிகள் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகை தந்த அனைத்து மாணவ, மாணவிகளுக்கு மீண்டும் எனது பாராட்டுகளைத் தெரிவித்து, அழைப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாடினார்.

---

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின்

# சட்டத்துறை வார் ரூம் திறப்பு விழா!

## மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 16-*

*சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் வே.தேவேந்திரன் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:*

*சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணியின் தலைவர் திரு மதி. சியாமளா மற்றும் துணைத் தலைவர் பாலசந்தர் ஆகியோர் முன்னிலையில் அமைப்பாளர் வே. தேவேந்திரன் தலைமையில், தமிழ்நாடு முதலமைச்சர், மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற சட்டமன்ற தேர்தல்-2026-ல் செம்மையாக பணியாற்றிட கழக மாவட்டம் தோறும் வார் ரூம் ( WAR ROOM ) திறக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலின்படியும், மற்றும் தி.மு.க சட்டத்துறையின் வழி காட்டுதலின்படி, சென்னை நுங்கம்பாக்கம், காம்தார் நகர், முதல் தெருவில் உள்ள சென்னை மேற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வார் ரூம் ( WAR ROOM )-ஐ, தி.மு.க சட்டத்துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ.M.P. மற்றும் மாவட்ட கழக செயலாளர் திரு.நே.சிற்றரசு.M.A.M.Phil. ஆகியோர் இன்று (16-03-2026 திங்கட்கிழமை) மாலை 7.00 மணியளவில் திறந்து வைத்து அனைத்து வழக்கறிஞர்களுக்கும் தேர்தல் கையேடு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட புத்தகம் (People Representation Act) வழங்க உள்ளனர்.*

*இந்த விழாவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன்.M.P., அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் மோகன்.MLA, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. எழிலன்.MLA, மற்றும் பகுதி கழக செயலாளர்கள் ந.இராமலிங்கம், A.R.P.M.காமராஜ், மா.பா. அன்புத்துரை, மதன் மோகன், ச.பரமசிவம், வினோத் வேலாயுதம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொள்கின்றனர்.*

*எனவே இந்த நிகழ்ச்சிக்கு சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி தலைவர், பகுதி துணைத் தலைவர் பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், மற்றும் வழக்கறிஞர் அணியின் அனைத்து வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூபாய் 4.45 லட்சம் மதிப்பிலான மதிப்பிலான செயற்கை கால்களை 8 மாற்றுத்திறனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் வழங்கினார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.மாலதிஹெலன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியக்குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், நகரமன்ற தலைவர் ஜெ.சண்முகம், ஒன்றியச் செயலாளர் ஆப்பூர் சந்தானம் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## மாதவரம் வடக்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்

# ஒன்றிய அரசையும் அடிமை கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## புழல் எம். நாராயணன் தலைமையில்!

*மாதவரம், மார்ச் 16-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் எரிவாயு சிலிண்டர் வழங்குவதில் நடவடிக்கை எடுக்காமல் மெத்தனம் காட்டும் ஒன்றிய அரசையும் அதற்கு துணை போகும் அடிமை கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*மாதவரம் வடக்கு பகுதி 19வது வட்டம் மாத்தூர் எம் எம் டி முதல் பிரதான சாலையில் நடைபெற்றது.*

*மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு 19வது வட்ட செயலாளர் மாத்தூர் கா தாமரைச்செல்வன் வட்டச் செயலாளர்கள் இ கண்ணப்பன் கே கருணாகரன் பிஎஸ் சந்துரு வி ஆர் குப்பன் தகுதி அவைத்தலைவர் வி திராவிட வீரன் கே சிவசங்கரன் பி. நிர்மல் குமார், பா. சந்திரன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, ஆர்.முரளி ஆகியோர் வரவேற்றனர்.*

*விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில மகளிர் நிர்வாகி பொற்கொடி காங்கிரஸ் பேரியக்கத்தின் நிர்வாகிகள் கொசப்பூர் தன்ராஜ் ரங்கநாயகி மதிமுக பொதுக்குழு உறுப்பினர் பாண்டியன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகி ராணி தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர்.*

*ஒன்றிய அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து பகுதி செயலாளர் புழல் நாராயணன் தலைமைக் கழகம் கொடுத்த வஞ்சிக்காதே வஞ்சிக்காதே தமிழ்நாட்டை வஞ்சிக்காதே போன்ற வாசகங்களை சொல்ல பொதுமக்களும் நிர்வாகிகளும் திரும்பச் சொல்லி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தார்கள் .*

*சென்னை வடகிழக்கு மாவட்ட மாதவரம் வடக்கு பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் சின்ன மாத்தூர் மணிகண்டன், எஸ். உதயகுமார்,மாத்தூர் பா.கோபிநாத், எஸ். கோபாலகிருஷ்ணன்,பி. துரைசாமி, சேரலாதன், துரை தசரதன், கே சண்முகப்பிரியன், டி. வினோத், எஸ். சிவகுமார், எஸ். நாகராஜன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். என். அஜய் தென்னவன், ஜி. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், எலந்தனூர் வி. சிவ பிரகாஷ், காவாங்கரை யுவராஜ், சாந்தகுமார், எம். அமுதா, ஆர்.சுதா, அம்மூ மூர்த்தி, சுகாசினி, அத்திகுளம் தேவி, சரஸ்வதி, ஆர். ஜெயபாரதி, வயலட் ராணி, சகிலா , ஐசிஎப் விஜயகுமார், புஷ்பராஜ்,, வக்கீல் திருமலை கார்த்திக், சையத்அப்சல், கோவர்த்தனன், கதிரவன், காஞ்சனா மோகன்*

*19 ஆவது வட்டம் சாய் சந்தீப்,மலர்மன்னன், சந்தோஷ், இரா குகன், ராஜகோபால், காசி, தமிழரசன், மலர்மன்னன், நாகராஜன், விக்ரமன், சாந்தகுமார், நெடுஞ்செழியன், செல்வகுமார், கலைச்செல்வி, சுந்தரி, புஷ்பநதி, சத்யா, தமிழ்ச்செல்வி, சுமதி, பரிமளா, நாகராஜ், ரோஸி, சந்தியா, கோடீஸ்வரி, குமார், தாழையானந்தன், இமானுவேல், பன்னீர்செல்வம், நாகலிங்கம்,*

*17 வது வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, எஸ் , பாலாஜி, டி .திவாகர், வட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். என். தளபதி, துணை அமைப்பாளர் விஷ்ணு, மைக்கேல், செந்தில்*

*பதினைந்தாவது வட்ட முன்னோடிகள் பக்தவச்சலம், ஏ. தசரதன், சீனிவாசன், வக்கீல் டில்லிபாபு, ஏசுதாஸ், விஜயன், விஜய், வினோத்,*

*பதினாறாவது வட்ட நிர்வாகிகள் வக்கீல் வெங்கடேசன், கே. எ. ரமேஷ், சி.முத்தையா, பரசுராமன், கடப்பாக்கம் மகேஷ் குமார், நீதி, சடையங்குப்பம் நைனியப்பன், பர்மா நகர் தினேஷ் சங்கர், செமின் எடிசன், செபின் எடிசன், காமராஜ்புரம் நாகலிங்கம், விக்னேஷ், எம். சுந்தர், சுந்தர், எம். கிருபாகரன் ,*

*23வது வட்டம் வக்கீல் டி. ராஜாராம்,க. சிவகுமார், வே. ரவி, மஞ்சுளா, ராஜா,*

*23 அ வட்டம் பி. முத்து கிருஷ்ணன், வி. ஹரி, பார்த்திபன், யாபேஸ், வாசுதேவன், சாமி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பலர் கலந்து கொண்டார்கள்.*